**மேதகு ஆளுநர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது வெள்ளாறு ஆற்றுப்படுகையில் செயல்பட்டுவரும் மணல் குவாரி குறித்து இன்று (19.2.2015) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் ஆற்றிய உரை:-**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், நெய்வாசல் கிராமத்தில் வெள்ளாறு ஆற்றின் வட பகுதி கரையில் அரசு உரிமம் பெற்ற மணல் குவாரி ஒன்று கடந்த 21.12.2014 முதல் செயல்பட்டு வருகிறது. மேற்படி ஆற்றின் தென்கரைப் பகுதியில் அமைந்துள்ள அரியலூர் மாவட்ட சன்னியாசி நல்லூர் கிராம மக்கள் மணல் குவாரியினால் தங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாகக் கூறி மணல் குவாரி செயல்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மணல் குவாரியிலிருந்த நான்கு ஜெ.சி.பி. வாகனங்களை தங்கள் கிராமத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர். இதனையடுத்து, கடந்த 27.01.2015 அன்று வருவாய் மற்றும் காவல் துறை அதிகாரிகள் சன்னியாசி நல்லூருக்குச் சென்று கிராம மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, மணல் குவாரி அமைந்துள்ள இடம் குறித்து மீண்டும் அளவீடு செய்வதாக உறுதியளித்து ஜெ.சி.பி. வாகனங்களை மீட்டுக் கொண்டு வந்துள்ளனர்.

அதன்படி, 30.01.2015 அன்று திட்டக்குடி மற்றும் அரியலூர் தாலுகா வட்டாட்சியர்கள், மணல் குவாரி அமைந்துள்ள இடத்திற்குச் சென்று அளவீடு செய்து, அக்குவாரி கடலூர் மாவட்டம், நெய்வாசல் கிராம எல்லையிலேயே அமைந்துள்ளதாக உறுதி செய்து, அதற்கான எல்லைக் கற்களைப் பதித்துள்ளனர்.

இருப்பினும், இதனால் திருப்தியடையாத சன்னியாசி நல்லூர் கிராம மக்கள், 04.02.2015 அன்று குன்னம் சட்டமன்ற திமுக உறுப்பினர் சிவசங்கர் தலைமையில் மேற்படி மணல் குவாரியை முற்றுகையிடப் போவதாக துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, 04.02.2015 அன்று காவல் மற்றும் வருவாய்த் துறையினர் மேற்படி மணல் குவாரி அமைந்துள்ள நெய்வாசல் கிராமத்தில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளனர். அன்றைய தினம் காலை சுமார் 10.30 மணியளவில், சட்டமன்ற உறுப்பினர் சிவசங்கர் தலைமையில் 200 பெண்கள் உட்பட 500 கிராமத்தினர், வெள்ளாறு ஆற்றில், தென்கரைப் பகுதியில், சட்டவிரோதமாகக் கூடி, மணல் குவாரி அமைந்துள்ள கிராமத்திற்குள் நுழைய முற்பட்டுள்ளனர். அப்போது

அங்கு பாதுகாப்புப் பணியிலிருந்த கடலூர் மற்றும் அரியலூர் மாவட்ட காவல் துறையினர், அவர்களைத் தடுத்து நிறுத்த முற்பட்டபோது, அக்கும்பல் காவல் துறையினர் மீது கல்வீசித் தாக்குதல் நடத்தியதோடு மணல் குவாரிக்குள் நுழைந்து ஜெ.சி.பி. உள்ளிட்ட வாகனங்களை சேதப்படுத்தி கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர். காவல் துறையினர் அவர்களைக் கலைந்து செல்லுமாறு பலமுறை எச்சரித்தும் கேட்காமல், அக்கும்பல் தொடர்ந்து கல்வீச்சில் ஈடுபட்டு பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததால், வேறு வழியின்றி காவல் துறையினர் அக்கும்பலை கலைந்து போக செய்துள்ளனர். இச்சம்பவத்தில் காயமடைந்த ஒன்பது காவல் ஆளிநர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். மேலும், கிராம மக்கள் 8 பேர் உள்நோயாளிகளாகவும், 13 பேர் வெளிநோயாளிகளாகவும் அரியலூர் மற்றும் செந்துறை அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஆவினங்குடி கிராம நிர்வாக அலுவலர் அளித்த புகாரின் அடிப்படையில் ஆவினங்குடி காவல் நிலையத்தில் சட்டமன்ற உறுப்பினர் சிவசங்கர் மற்றும் சன்னியாசி நல்லூர் கிராமத்தினர் மீது வழக்கு (கு.எண் 10/2015) பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது அப்பகுதியில் காவல் துறையினர் தொடர்ந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருவதால், மணல் குவாரி எவ்வித இடையூறுமின்றி செயல்பட்டு வருகிறது. வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது.

*****